padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை


## பகுதி II

21



1940—களின் முற்பகுதியில், வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும், இடதுசாரிக் கட்சிகளும், இடதுசாரி இயக்கங்களும்—வேரூன்ற ஆரம்பித்ததை அவதானித்த பிரித்தானிய காலனிய அரசு அதை ஒரு சிவப்பு அரசியல் நெருக்கடியாகக் கருதியது. பௌத்த சிங்கள தேசியவாதத்தை முன்னணிக்குக் கொண்டு வருவதன் மூலம், இந்த நெருக்கடியை முளையிலேயே கிள்ளி விடலாம் என்று பிரித்தானிய ஆட்சியாளர்கள் நினைத்தனர்.

அதிலும் கூட அவர்கள் ஒரு பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டார்கள். அதாவது பௌத்த சிங்கள தேசியவாதத்தைக்கூட முழுமையான அளவில் வளரவிடாது காலனியச் சார்புத் தன்மையுடைய அரை நிலப்பிரபுத்துவ மற்றும் தரகு முதலாளித்துவத் தன்மையுடைய சிங்களத் தலைவர்களை ஒன்றிணைத்து ஒரு போலித் தேசிய அமைப்பை உருவாக்கினார்கள். அவ்வாறு உருவாக்கப்பட்டதுதான்— ஐக்கிய தேசியக் கட்சி (1946)யாகும். இக் கட்சியின் தலைவராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா முதற் கொண்டு தன்னை தீவிரமான பௌத்த சிங்கள தேசியவாதியாகக் காட்டிக் கொண்ட ஜே.ஆர் ஜெயவர்த்தனாவிலிருந்து எல்லோருமே ஆங்கிலக் கல்வி கற்று ஆங்கிலேய வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற அரசியல் அமைப்பு முறையே உலகின் தலை சிறந்த அரசியல் அமைப்பு முறை என்று துதி பாடிய இலண்டன் கனவான்களாகவே இருந்தார்கள்.



1941—42 காலப்பகுதியில் அப்போது ஆட்சி மொழியாக இருந்த ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

1943-ம் ஆண்டு ஆனி மாதம் ஜே. ஆர் ஜெயவர்த்தனா தனிச் சிங்கள பிரேரணையை சட்ட [illegible]யில் கொண்டு வந்தார். 194[illegible] ஆண்டு வைகாசி மாதம் இது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தனது கோரிக்கையை நியாயப்படுத்திப் பேசிய ஜே.ஆர். ஜெயவர்த்தனா...

'இந்த நாட்டில் சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்த்துக் கொடுக்கப்படுமானால் முழு உலகிலும் 30 இலட்சம் மக்களால் மட்டுமே பேசப்பட்டுவரும் சிங்களம் பெரும் இன்னலுக்கு உள்ளாக்கி, காலகதியில் அது முற்றாக அழிந்துவிடக் கூடும் என்ற பெரும் அச்சம் என்னிடமுள்ளது. நான்கு கோடித் தமிழர்களால் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வரும் தமிழ் நூல்களின் செல்வாக்காலும், தமிழ் திரைப்படங்களாலும், தமிழ் கலாச்சாரமும் இந் நாட்டில் ஏற்படுத்திவரும் தாக்கங்களாலும், சிங்கள மொழியின் எதிர்காலம் முடிவு கட்டப்படுவதாய் அமைந்துவிடும் என நான் எண்ணுகிறேன்' என்று கூறினார்.

அப்போது மட்டக்களப்பு பிரதிநிதியாக இருந்த வி. நல்லையா தமிழும் உத்தியோக பூர்வ மொழியாக இருக்க வேண்டும் என்று கோரியதால் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் தனிச் சிங்களக் கோரிக்கை திருத்தப்பட்டு சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் உத்தியோக பூர்வ மொழிகளாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் தமிழீழப் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சியாக ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி இருந்தது. ஜீ.ஜீ பொன்னம்பலம் உட்பட அக்கட்சியிலிருந்து அநேக

**சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்த்துக் கொடுக்கப்படுமானால் முழு உலகிலும் 30 இலட்சம் மக்களால் மட்டுமே பேசப்பட்டுவரும் சிங்களம் பெரும் இன்னலுக்கு உள்ளாக்கி, காலகதியில் அது முற்றாக அழிந்துவிடக் கூடும் என்ற பெரும் அச்சம் என்னிடமுள்ளது.**

மான தலைவர்கள் இங்கிலாந்து சென்று ஆங்கிலக் கல்வி கற்ற இலண்டன் கனவான்களாகவே இருந்தனர். சிங்களக் கனவான்களைப் போலவே அவர்களுக்கும் ஆங்கிலேய எஜமானனின் வெஸ்ட்மினிஸ்டர் ஒற்றை ஆட்சி முறையே உலகத்தின் தலை சிறந்த ஆட்சி முறையாக இருந்தது.

அவர்கள்- தமிழர்கள் ஒரு தேசிய இனம்- அவர்களுடைய தாயகம் தமிழீழம்— அது தன்னாட்சி உரிமையுடையது, என்றெல்லாம் சிந்திக்கவில்லை. அப்படிச் சிந்திப்பது அவர்களுடைய எஜமானர்களது கண்ணோட்டத்தில் `Dirty View' (அசிங்கமான பார்வை) வாக இருந்தது.

அதனால் `Ceylon' என்ற ஒற்றையாட்சிச் சிறைக்குள் இருந்து தமிழீழ நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு ஏற்படவில்லை.

1942—ம் ஆண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட மேதின கொள்கைப் பிரகடனத்தில்

'தமிழர்கள் தனித்துவம் பெற்ற தேசிய இனம்; வடக்கு கிழக்குப் பகுதிகள் அவர்களது பாரம்பரியப் பிரதேசங்கள். இதைத் தமிழர்கள் ஆள ஏற்ற அரசை அமைத்துக்கொள்ள, லெனினிசக் கோட்பாட்டின்

# தமிழர் தாயகத்தை மீட்கத் தவறிய தமிழர் தலைவர்கள்

**அவர்கள்— தமிழர்கள் ஒரு தேசிய இனம்— அவர்களுடைய தாயகம் தமிழீழம்- அது தன்னாட்சி உரிமையுடையது, என்றெல்லாம் சிந்திக்கவில்லை. அப்படிச் சிந்திப்பது அவர்களுடைய எஜமானர்களது கண்ணோட்டத்தில் `Dirty View' (அசிங்கமான பார்வை) வாக இருந்தது. அதனால் `Ceylon' என்ற ஒற்றையாட்சிச் சிறைக்குள் இருந்து தமிழீழ நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு ஏற்படவில்லை.**

படி சுய நிர்ணய உரிமையை அனுபவிக்க தமிழினம் உரித்துடையது. அவசியமானால் அவர்கள் பிரிந்து தனித்துவமான அரசை உருவாக்க உரிமை பெற்றவர்கள்' என்று கூறியிருந்தது.

ஆனால் தமிழ் மக்களது கட்சி என்று சொல்லிக் கொண்டே தமிழ் காங்கிரஸ் கட்சி சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையோ தமிழர்களுக்கென்று ஒரு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையையோ முன் வைக்கவில்லை.

மாறாக பெரும்பான்மை சிங்கள இனத்துக்கு சமமாக — சிறீலங்காவின் ஒற்றையாட்சி பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனங்களுக்கு 50% அதாவது 50க்கு 50% பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையாக இருந்தது.

இந்த நிலையில் 1944-ம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழு இலண்டனிலிருந்து இலங்கைக்கு வந்தது. அப்போது அமுலில் இருந்த டொனமூர் ஆட்சி முறை இலங்கையில் இருந்த சிறுபான்மை இனங்களைப் பாதுகாக்கத் தவறி விட்டதாகவும், சிறுபான்மை இனங்களைப் பாதுகாக்கும் விதத்தில் அவர்களது அரசியல் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் புதிய அரசியல் அமைப்பு முறை ஒன்றை உருவாக்குவதே அந்த ஆணைக்குழுவின் நோக்கம்

என்று கூறப்பட்டது.

ஆனால் உண்மையில், இலங்கையில் இருந்த இன முரண்பாடுகளை எவ்வாறு கையாண்டு சிங்களவர்களையும், தமிழர்களையும் மோத விடுவதன் மூலம் தங்களுடைய பொருளாதார நலனை பாதிப்புக்குள்ளாக்காமல் தொடர்ந்து பாதுகாக்கலாம் என்பதே இந்த ஆணைக் குழுவின் நோக்கமாக இருந்தது.

சோல்பரி கமிசன் முன் காட்சியளித்த ஒரு பகுதியினர் இன அடிப்படையில் 101 ஆசனங்கள் கொண்ட சட்ட சபையில் சிங்களவர்களுக்கு 58 ஆசனங்களும், இலங்கைத் தமிழர்களுக்கு 15 ஆசனங்களும், இந்தியத் தமிழர்களுக்கு 14 ஆசனங்களும் முஸ்லீம்களுக்கு 8 ஆசனங்களும், 6 ஆசனங்கள் நியமன அடிப்படையிலும் வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

தமிழ் காங்கிரஸ் கட்சியினர் 50க்கு 50 என்ற அடிப்படையிலேயே பிரதிநிதித்துவம் அமைய



வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் யாருக்கு எதை வழங்க வேண்டும் என்று டி. எஸ் சேனநாயக்கா போன்ற சிங்களத் தலைவர்களுடன் முன் கூட்டியே இரகசிய உடன்பாட்டுக்கு வந்திருந்த சோல்பரிக்குழு இனவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தமிழ் காங்கிரசின் 50க்கு 50 கோரிக்கைகளையும் நிராக

**சிங்கள இனத்துக்கு சமமாக - சிறீலங்காவின் ஒற்றையாட்சி பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனங்களுக்கு 50% அதாவது 50க்கு 50% பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையாக இருந்தது.**

ரித்துவிட்டு சிங்களவர்களுக்கு 65% பிரதிநிதித்துவமும் தமிழர்களுக்கு 35% பிரதிநிதித்துவமும் கிடைக்கும் விதத்தில் புதிய அரசியல் திட்டம் ஒன்றை சிபார்சு செய்தது. கண்துடைப்புக்காக இந்த அரசியல் திட்டத்தில் சிறுபான்மை இனங்களையும், மதங்களையும் பாதுகாக்கவென 29—வது சரத்து ஒன்றை உருவாக்கி இருப்பதாகவும் இவ் ஆணைக்குழு கூறியது.

இவ்வாணைக் குழுவின் தலைவராக இருந்த சோல்பரிப் பிரபு— 1940-ம் ஆண்டிலிருந்தே டி.எஸ் சேனநாயக்காவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் என்பதற்கு 1964—ம் ஆண்டு ஸி. சுந்தரலிங்கத்துக்கு அவர் எழுதிய கடிதங்கள் சான்றாகும் என்று மு. திருநாவுக்கரசு கூறுகிறார்.

அவர் இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள் என்ற புத்தகத்தில் இலங்கைத் தமிழர்கள் பிரிந்து இந்தியாவுடன் சேர்ந்துவிடுவதற்கான வாய்ப்பு இருப்பதாக சோல்பரி பிரபு 1940 லேயே டி.எஸ் சேனநாயக்காவுக்கு தெரிவித்திருந்ததையும்,

அதே சோல்பரி பிரபு 1963-ம் ஆண்டு பி.ஏச். பாமர் என்பவர் எழுதிய நூலுக்கு எழுதிய முன்னுரையில், 'இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளில் இருப்பதான அடிப்படை உரிமையைத்தானும் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்க தனது அரசியலமைப்பு திட்டம் தவறி விட்டதென்றும், டி.எஸ் சேனநாயக்கா உயிருடன் இருந்திருந்தால் தமிழருக்கு

**சோல்பரிப் பிரபு- 1940—ம் ஆண்டிலிருந்தே டி.எஸ் சேனநாயக்காவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் என்பதற்கு 1964-ம் ஆண்டு ஸி. சுந்தரலிங்கத்துக்கு அவர் எழுதிய கடிதங்கள் சான்றாகும்**

இந்த நிலை வந்திருக்காது. இலங்கை இனப் பிரச்சினை பற்றி தன்னிடம் அக்காலத்தில் போதிய அறிவு இருந்திருக்கவில்லை என்று குறிப்பிட்டதையும் ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

**- நக்கீரன்**

படிப்பகம்